பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

11 02 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
தலைப்புச் செய்திகள்

1) 21-ஆம் நூற்றாண்டை இந்தியாவின் நூற்றாண்டாக மாற்றுவதில் எரிசக்தித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா நினைவு தினத்தையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

3) பிரதமரின் கிராமச்சாலைகள் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 63 ஆயிரம் கிராமங்களுக்கு சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4) பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால் ஹமாஸ் அமைப்புடனான அமைதி உடன்படிக்கையை இஸ்ரேல் ரத்து செய்ய நேரிடும் என அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

5) தில்லி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

21-ஆம் நூற்றாண்டை இந்தியாவின் நூற்றாண்டாக மாற்றுவதில் எரிசக்தித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெறும் எரிசக்தி வார விழாவை காணொலி வாயிலாக தொடங்கிவைத்து பேசிய அவர், இந்தியா தனது சுய வளர்ச்சிக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டு வருகிறது என்றார்.

இந்தியாவின் எரிசக்தித் திட்டங்கள் ஐந்து முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் செயல்படுத்தப்படுவதாக அவர் கூறினார்.

இதன்படி, நமது எரிசக்தி வளங்களை கண்டறிந்து பயன்படுத்துதல், புதுமை கண்டுபிடிப்புகள் மேற்கொள்வதை ஊக்குவிப்பதுடன், பொருளாதார வலிமை மற்றும் அரசியல் நிலைத்தன்மையை உறுதி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், எரிசக்தி வர்த்தகத்தை எளிமையாக்கி, உலகில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த இந்தியா உறுதிபூண்டிருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில், அடுத்த 20 ஆண்டுகள் மிக முக்கியமானவை என்று குறிப்பிட்ட அவர், 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை 500 ஜிகாவாட் அளவுக்கு அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

சூரியசக்தி மின்சார உற்பத்தியில் இந்தியா உலகில் மூன்றாவது இடம் வகிப்பதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் பேசிய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி, பிரதமரின் உஜ்வாலா திட்டம், நகர்ப்புற எரிவாயு கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் சூரியசக்தி பயன்பாடு மூலம், இந்தியாவில் சமையல் பணிகள் 100 சதவீதம் தூய்மையான எரிசக்தி மூலம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

பாரீசில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்துகொள்கிறார்.

உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தர நிர்ணயம் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த வளர்ச்சியை ஊக்குவிப்பது குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

குறிப்பாக, தனிநபர் தரவுகளை பாதுகாத்தல், வேலையிழப்புகளை தவிர்ப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரானுடனும் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளார்.

அப்போது இந்தியா – பிரான்ஸ் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

இதுதவிர, இந்தோ – பிரெஞ்ச் தொழில் நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளையும் திரு நரேந்திர மோடி சந்திக்கவுள்ளார்.

அதனைத்தொடர்ந்து, **Marseille** நகரில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பிரதமரும், பிரான்ஸ் அதிபரும் கூட்டாக பங்கேற்கின்றனர்.

<<<<<<>>>>>

பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா நினைவு தினத்தையொட்டி, தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தாய்நாட்டின் பெருமையை மீட்டெடுப்பதற்காக தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா என்று குறிப்பிட்டுள்ளார்.

புதுதில்லியில் உள்ள பிஜேபி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அக்கட்சி தலைவர் திரு ஜெ பி நட்டா உள்ளிட்டோர் பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

<<<<<<>>>>>

பிரதமரின் கிராமச்சாலைகள் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 63 ஆயிரம் கிராமங்களுக்கு சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு கமலேஷ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இன்னும் ஏராளமான கிராமங்களுக்கு சாலை வசதி செய்ய வேண்டியிருப்பதாக கூறினார்.

எனவே, இத்திட்டத்தின் நான்காம் கட்டமாக 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் திரு கமலேஷ் பாஸ்வான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சட்டீஸ்கர் மாநிலத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

ராய்பூர் உள்ளிட்ட 10 மாநகராட்சிகள், 49 நகராட்சி மற்றும் 114 நகர பஞ்சாயத்துகள் என மொத்தம் 173 உள்ளாட்சி அமைப்புகளுக்கு காலை எட்டு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 15-ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

இதனைத்தொடர்ந்து, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்க வரும் 17, 20 மற்றும் 23-ஆம் தேதிகளில் தேர்தல் நடைபெறவுள்ளதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மத்திய பட்ஜெட் மீதான விவாதத்திற்கு நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று பதிலளிக்க உள்ளார்.

மாநிலங்களவையில் நாளை மறுநாள் நிதியமைச்சர் பதிலுரை ஆற்றுகிறார்.

நாடாளுமன்றத்தில் கடந்த ஒன்றாம் தேதி தாக்கல் செய்யப்பட்ட வரும் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட் மீது இரு அவைகளிலும் கடந்த ஏழாம் தேதி முதல் விவாதம் நடைபெற்று வருகிறது.

<<<<<<>>>>>

தைப்பூசம் தமிழகம் முழுவதும் உள்ள முருகப்பெருமான் ஆலயங்களில் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவிலில், லட்சக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாகவும், காவடி எடுத்துவந்தும் வழிபடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - திண்டுக்கல் ராஜசேகரன் - 46 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

முருகப்பெருமானுக்கு உகந்த தினமான தைப்பூசத்தையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தமிழ் குடியின் ஆதி கடவுளாகவும், நம்மால் அன்போடு போற்றப்படுபவராகவும் முருகப்பெருமான் திகழ்வதாக கூறியுள்ளார்.

மக்கள் அவரவர் நினைத்த நற்காரியங்கள் சகலவிதமான மகிழ்வோடும் நிறைவேற தைப்பூச தினத்தில் முருகப்பெருமானை வேண்டிக்கொள்வதாகவும் திரு எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் 30-ஆவது நாளான இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

பிரயாக்ராஜ் வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், அங்கு வாகன போக்குவரத்தை முறைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரயாக்ராஜ் நகர் முழுவதும் இன்று முதல் வாகன போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய மற்றும் அவசர தேவைகளுக்கான வாகனங்கள் மட்டுமே நகருக்குள் அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியூர்களிலிருந்து வரும் வாகனங்களுக்கென பிரத்யேக நிறுத்துமிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், புனித நீராடும் இடங்களிலும் பக்தர்கள் விதிமுறைகளை பின்பற்றி நடந்துகொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

<<<<<<>>>>>

பிணைக்கைதிகளை விடுவிக்காவிட்டால் ஹமாஸ் அமைப்புடனான அமைதி உடன்படிக்கையை இஸ்ரேல் ரத்து செய்ய நேரிடும் என அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் உள்ள பிணைக்கைதிகள் அனைவரையும் வரும் சனிக்கிழமைக்குள் விடுவிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பினர் இதனை ஏற்காவிட்டால், அந்த அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்திய அதிபர் திரு ட்ரம்ப், எனினும் இதுபற்றி இஸ்ரேல்தான் இறுதி முடிவெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தில்லி ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 4-6, 6-2, 6-0 என்ற செட் கணக்கில் ஃபிரான்சின் **Sascha Gueymerd Wayenvurg**-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ராம்குமார் ராமநாதன் - செக் குடியரசின் **Dalibor-**ஐ எதிர்கொள்கிறார்.

---------

தமிழக குழந்தைகள் நலத்துறையின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

**<<<<<<END>>>>>**